IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS (PW1)

வா.சா. 1 சாட்சி முத்து த.பெ.அழகுமலை

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 09.09.2024 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரம் நான் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விவரங்களை வழக்கறிஞர் படித்துக்காட்டி தெரிந்துகொண்டேன். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடத்தை பிரதிவாதி அபகரிக்க பார்க்கிறார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தின் சர்வே எண் மற்றும் டி.எஸ் நம்பர் தெரியுமா என்றால் சர்வே எண் 71ல் 2 அல்லது 3 என்று நினைக்கிறேன்.

2. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் மொத்த இடத்திற்கும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரையபத்திரத்தில் கண்ட பாப்பம்மாள் எனது தாயார் என்றால் சரிதான் அவர் தற்போது இறந்துவிட்டார். எனது தாயார் இறந்த பின்னர் நானும், எனது உடன்பிறந்தவர்களும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை பத்திரமான வா.சா.ஆ.2ல் கண்டுள்ளவாறு அளந்து பிரித்தோமா அல்லது அளக்காமல்

பிரித்துக்கொண்டோமா என்றால் ஆவணத்தில் உள்ளவாறு அப்படியே பிரித்துக்கொண்டோம்.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்குச் சொத்தை அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் பிரதிவாதி ஆணையாளர் நியமன மனு செய்து அதன்பேரில் ஆணையாளர், நிலஅளவையர் ஆகியோர் தாவா இடத்தினை அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். இதே வழக்கில் பிரதிவாதி இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக கூறி எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. ஆணையாளர் அறிக்கையை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். மேற்படி அறிக்கையில் பிரதிவாதி எனது இடத்தை எவ்வித ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் மாறாக நான் தான் பிரதிவாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று அறிக்கையில் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5.மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறாக உள்ளது என்று கூறி வேறு சட்டநடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.1ஆகவும், வரைபடம் நீ.ம.சா.ஆ.2ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பிரதிவாதி பாண்டியை சின்னபாண்டி என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி பாண்டியின் அண்ணன் பெயரும் பாண்டி என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் பெயர் கருப்பத்தேவர் என்றால் சரிதான். மேற்படி கருப்பத்தேவரின் தகப்பனார் பெயர் தாளைத்தேவர் என்றால் சரிதான்.

6. மேற்படி தாளைத்தேவருக்கு 4 ஆண்மக்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது.  தாளைத்தேவருக்கு பூர்வீக் சொத்துக்கள் இருந்ததா என்றால் தெரியாது. செங்குளம் கிராமத்தில் 70/3ல் 36 செண்டும், 70/13ல் 26 செண்டும் ஆக மொத்தம் 62 செண்டு தாளைத்தேவருக்கு பாத்தியம் என்றால் தெரியாது.

7. தாளைத்தேவருக்கு பிறகு அவரது வாரிசுகளான முத்தையாத்தேவர், ஒச்சனத்தேவர், கருப்பனத்தேவர் ஆகியோர் மேற்படி 62 செண்டை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.  மலையாண்டித்தேவருக்கு வேறு சொத்துக்கள் ஒதுக்கியதால் அவர் பாகப்பிரிவினையில் கலந்து கொள்ளவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.  மேல்புறம் 20 3/4 செண்டு முத்தையாத்தேவருக்கும், கிழக்கே 20 1/2 செண்டு ஒச்சனத்தேவருக்கும், அதற்கு கிழக்கே 20 3/4 செண்டு கருப்பத்தேவருக்கும் ஒதுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

8. முத்தையாத்தேவர் அவரது அம்மா கருப்பாயி என்பவருடன் சேர்ந்து மேல்புறம் 20 3/4 செண்டை ஒச்சனத்தேவர் மற்றும் கருப்பத்தேவருக்கு 3.8.1960ம் தேதிய கிரையபத்திரத்தின் படி கிரையம் கொடுத்துள்ளார் என்றால்  தெரியாது. மேற்சொன்ன கிரையத்தின் மூலமும், பூர்வீக பங்கின் மூலமும் ஒச்சனத்தேவரும், கருப்பத்தேவரும் 62 செண்டிற்கு பாத்தியமாகி அதை அவர்களுக்குள் பிரித்துக்கொண்டதில் கீழ்புறம் 32 1/2 செண்டு கருப்பத்தேவருக்கும், மேல்புறம் ஒச்சனத்தேவருக்கு 29 1/2 செண்டும் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது.

9.கருப்பத்தேவர் பெயரில் டவுன் சர்வே எண் 2/7 –ல் பெயர் ஏற்பட்டது என்றால் தெரியாது. கருப்பத்தேவருக்கு 2பெண்மக்கள், 4

ஆண்மக்கள் என்றால் சரிதான். கருப்பத்தேவர் உயிருடன் இருந்த காலத்தில் 13.1.2007ம் தேதியில் அவரது சொத்துக்களை பொறுத்து உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 12.2.2007ம் தேதி கருப்பத்தேவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். உயில் உரிமையின் படி கருப்பத்தேவரின் ஆண் வாரிசுகளான 2பாண்டிகளும் சர்வே எண்70/6, 70/7 ஆகிய எண்களில் கண்ட 32 1/2 செண்டிற்கு பாத்தியமானார்கள் என்றால் சரிதான். 4 வழிச்சாலை அமைத்த காலத்தில் மேற்சொன்ன 32 1/2 செண்டில் 19 1/2 செண்டை பாண்டி மற்றும் அவரது சகோதரரிடமிருந்து ஆர்ஜிதம் செய்தது என்றால் சரிதான். ரோட்டிற்கு ஆர்ஜிதம் செய்தது போக 13 1/2 செண்டு பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது.

10. எனது இடம் டி.எஸ்.நம்பர் 3/2 என்றால் சரிதான். எனது இடத்திற்கு மேற்கே பிரதிவாதிகளின் இடம் டி.எஸ். எண்.2/7B உள்ளதா என்றால் இல்லை. மேற்கே புறவழிச்சாலை உள்ளது. 2/7B க்கு தெற்கே 2/8B உள்ளது என்றால் தெரியாது. எனக்கு டி.எஸ்.நம்பர் 3/2–ல் மட்டும் தான் உரிமை உள்ளது அதற்கு மேற்கே எனக்கு இடம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.9 பட்டாவிற்கு கூடுதலாக எனக்கு இடம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்திற்கும் கூடுதலாக எனக்கு இடம் உள்ளது. அதன்படி வடக்குபக்கம் 8 அடியும், கிழமேலாக 21 அடியும், தென்வடலாக 60 அடியும் உள்ளது. மேற்படி அளவுகளில் கண்ட இடமானது வா.சா.ஆ.9 ஆவணத்திற்கு மேற்கே உள்ள இடம் என்றால் சரிதான். மேற்படி அளவுகள் கொண்ட இடமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும், அதனை நான் அரசு

புறம்போக்கு இடம் என்று கூறி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு மேற்கே தான் 4வழிச்சாலை உள்ளது என்றால் தெரியாது. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடப்பிரச்சனை இருப்பது சம்மந்தமாக 6.9.18ல் நிலஅளவையர் இடத்தை அளக்க வருவதாக அறிவிப்பு வந்தது என்றால் சரியல்ல. அன்றைய தினம் அளந்தபோது பிரதிவாதிகளின் இடத்தில் தென்கிழக்கு மூலையில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நிலஅளவையர் கூறினார் என்றால் சரியல்ல. அவ்வாறு கூறினார் என்றும், பின்னிட்டு நான் பிரதிவாதிகளிடம் மேற்படி இடத்தை ஒப்படைத்து விடுவதாக கூறினேன் என்றாலும், சரியல்ல.

12.மேற்படி விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 6.9.18–ல் அளப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்பாகத்தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படியாக அளக்கும்போது நான் ஆக்கிரமித்தது தெரிய வந்ததால் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக கூறினேன் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை தவிர்த்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை கம்பி வேலி போட்டு அடைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வீட்டில் மராமத்து வேலைகளை 2018ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் மேற்கொண்டோம் என்றால் சரிதான்.

13.அந்த காலகட்டத்தில் எனது வீட்டின் கட்டுமான பகுதியை கூடுதலாக நான் பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஆக்கிரமிப்பு செய்த பகுதியை பொறுத்து விளம்புகை பரிகாரமும், சுவாதீன திரும்பபெறும் பரிகாரமும் கோரி எதிர்கோரிக்கை தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. பிரதிவாதி எந்தகாலத்திலும் எனது சொத்தை

விலைக்கு கேட்டதில்லை என்றும், வா.சா.ஆ.9ல் கண்டுள்ள இடத்தை பொறுத்து பிரதிவாதி எந்த ஆட்சேபனை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

14. பிரதிவாதியின் சொத்தை நான் ஆக்கிரமித்து அதனை மறைத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிராது சொத்து விபரத்தில் கண்டுள்ள அடியளவுகள் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள கிரைய ஆவணத்தை கிரையம் கொடுத்த சீனியம்மாள் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை.

15. எனது அம்மாவின் முன்பாகஸ்தியரின் உரிமையை பரிசீலனை செய்யாமல் வா.சா.ஆ.1ல் கண்ட அடிளவுகளை உண்மையென ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், எதிர்கோரிக்கை அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.